Registered as a News Paper · பக்கங்கள் 04 · விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 03 · திருவள்ளுவர் ஆண்டு 2023 · புரட்டாதி 14 · (30 - 09 - 1992) · புதன்கிழமை · ஓசை 225

## தமிழீழ பாடசாலைகளில் கடல்வள தொழில்நுட்ப பாடம்

தமிழீழ பாட சாலைகளில் கடல் வளம் தொடர்பாக மாணவர்களுக்குதொழில் நுட்ப அறிவை ஊட்டும் வகையில் தொழில் முன்னிலைப் பாடங்களைக் கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது இதற்கான நடவடிக்கைகளை உரியவர்களுடன் தொடர்பு கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுவருகிறது. தமிழீழத்தின் பொருண்மியம் (பொருளாதாரம்) பெரிதும் கடல்வள மேம்பாட்டில் (அபிவிருத்தியில்) தங்கியுள்ளது. ஆயினும் தமிழீழப் பகுதிகளில் இத்துறை போதிய அளவில் வளர்ச்சியடையவில்லை அதனால் கடல்வளத்தை முழுமையாகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தாக்குதல் தந்திரோபாயம்

# பாரிய இழப்புகளால் அரசு திகைப்பு

### ஆவணங்களை தவறவிட்டோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள மாதகல் மற்றும் இளவாலைப் பகுதிகளில் தமது ஆவணங்களைத் தவறவிட்ட அரசாங்க ஊழியர்கள் அவற்றை மீளப் பெறுவதற்காக விண்ணப்பித்த போது தமது தொழில் விபரம் போன்ற சில முக்கிய விபரங்களைத் தெரிவிக்கத் தவறியுள்ளனர்.

எனவே அத்தகைய ஆவணங்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## குழம்பிய நிலையில் ராணுவ திட்டங்கள்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் வடக்கிலும், கிழக்கிலும் மாறி மாறி மேற்கொண்டு வரும் தாக்குதல்களும், அதன் காரணமாக சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டுவரும் பாரிய உயிர், தளபாட இழப்புக்களும் சிங்கள அரசிற்கு பெரும் அதிர்ச்சியையும், கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது இதேவேளை பிரதேசத்திற்குப் பிரதேசம் விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் போர்யுக்திகளும், தேவைக்கேற்ப கடைப்பிடிக்கும் தந்திரங்களும் இராணுவத்தின் போர் திட்டங்களில் பெரும் குழப்பநிலையை உருவாக்கியுள்ளன.

விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமை பெருமளவு முடக்கப்பட்டு விட்டது என இராணுவ தரப்பால் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் விடுதலைப் புலிகள் வடக்கிலும்- கிழக்கிலும் தொடர்ந்து மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்களினால் அரசாங்க வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 400க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் கடந்த பத்துநாட்களில் மட்டும், வடக்கிலும் - கிழக்கிலும் நடந்த நான்கு தாக்குதல்களில் சுமார் 65க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது

சிறிலங்கா இராணுவம், வடக்கில் தாக்குதலுக்கான முஸ்தீபுக்களில் ஈடுபடும் போது கிழக்கிலும், வன்னியிலும் விடுதலைப் புலிகள் தாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### "விடுதலைப் புலிகள்" வெளிவந்து விட்டது

புரட்டாதி மாத "விடுதலைப் புலிகள்" ஏடு வெளிவந்துள்ளது. "புலிகளின் அபாரசாதனைகள்; இராணுவ போர்உறுதி சீர்குலைவு எனும் தலைப்புச்செய்தியைத் தாங்கியுள்ள இவ் இதழில் தபமதீப மும்- தமிழர் தாயகமும் என்ற ஆசிரியர் தலையங்கம் இடம் பெற்றுள்ளது. அத்துடன் லெப். கேணல் ராஜனைப் பற்றிய ஒரு கட்டுரையும் பொஸ்னிய தேசிய இனப் பிரச்சினை பற்றிய ஒரு கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

## சிறிலங்கா ஜனாதிபதி நாளை இந்தியா விஜயம்

[கொழும்பு]

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நாளை முதல் இந்தியாவிற்கு மூன்று நாள் பயணத்தைத் தொடங்குகிறார்

சார்க்கின் தலைவர் என்ற முறையில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்கிறார். ஜனாதிபதி ஏற்கனவே பாகிஸ்தானிலும், நேபாளத்திலும் தமது பயணத்தை முடித்துக் கொண்டுள்ளார். ஏனைய சார்க் நாடுகளுக்கும் அவர் செல்லவுள்ளார்.

## அடுத்த வருட நடுவில் 7 மாகாணசபை தேர்தல் வட-கிழக்குக்கு முடிவில்லை

(கொழும்பு)

ஏழுமாகாணங்களுக்கான மாகாணசபைத் தேர்தல்களை அடுத்த வருட நடுப்பகுதியில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையாளர் ஆர். கே சந்திரானந்த டி. சில்வா தெரிவித்துள்ளார்.

சரியான திகதிகள் முடிவு செய்யப்படாவிட்டாலும் தேர்தலுக்கான ஆயத்தங்கள் தொடங்கிவிட்டதாக மேலும் அவர் தெரிவித்தார்

இதேவேளை வட - கிழக்கு மாகாணங்களுக்கான மாகாண சபை தேர்தல் குறித்து முடிவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிராமத்தை சுற்றிவளைக்க முயன்ற இராணுவம் புலிகளால் விரட்டியடிப்பு

### ஒரு போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புகிராமங்களை சுற்றி வளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களைவிரட்டியடித்தனர். தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் முகாம்களுக்கு ஓடிச் சென்று அங்கிருந்து எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; கடந்த வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு கிராமங்களைசுற்றி வளைக்கும் நோக்கத்துடன் சிறிலங்கா இராணுவத்தினர் ... தமது பழைய நிலைகளை நோக்கி ஓடிவிட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கோட்டையில் போரிட்ட பொலிசாருக்கு பதவிஉயர்வு கிட்டவில்லை

(கொழும்பு)

யாழ். கோட்டையை விடுதலைப்புலிகள் தாக்கிய போது சுமார் மூன்று மாத காலம் கோட்டைக்குள் இருந்து எதிர் தாக்குதல்நடாத்திய 95 தமிழ் முஸ்லிம் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு இதுவரை பதவி உயர்வு வழங்கப்படவில்லை என சிறிலங்கா ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

இவர்களுக்கு சன்மானமும் பதவி உயர்வும் வழங்கப்படும் என அரசு முன்னர் உறுதியளித்த போதும் இன்றுவரை சன்மானம் மட்டுமே வழங்கப் பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டிச. 31 இற்கு பின் தமிழ்க்குழுக்கள் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேற வேண்டும்

### ரெலோ கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட ... மன்றத்தில் இருந்தும் வெளி

## ராணுவம் பதுங்கிதாக்கியதில் 2 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு கித்தல்என்ற ... கடந்த வியாழனன்று மாலை

### அகதிகளுக்கு போஷாக்கு உணவு

முகாம்களில் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் அகதி

### வீரச்சாவு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு திருப்தியான முடிவைக் காண்பதில் தாமதப் போக்கைக் கடைப் பிடித்தால், தமிழ்க் குழுக்கள் அனைத்தும் இவ் வருடம் டிசம்பர் 31ஆம் திகதிக்குப்பின்பாராளுமன்றத் தெரிவுக் குழுவில்இருந்தும் பாராளுமன்றத்தில் இருந்தும் வெளியேறவேண்டும் என ரெலோ ஏனைய தமிழ்க்குழுக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்தவாரம் தமிழ் குழுக்களின் கூட்டம் கொழும்பில் நடந்த போதே ரெலோ குழுவைச்சேர்ந்த ஸ்ரீகாந்தா இவ்

(4ஆம் பக்கம பார்க்க)

மயிலந்தனை படுகொலை

## 16 இராணுவத்தினர் இனம் காணப்பட்டனர்

மயிலந்தனையில் கடந்த ஆகஸ்ட் மாதம எட்டாம்திகதி 39தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டது தொடர்பாக 16 இராணுவத்தினர் சாட்சிகளால் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற அடையாள அணிவகுப்பு ஒன்றின்போதுசம்பவத்தை நேரில் பார்த்தவர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

## இராணுவச் செலவீட்டில் வெட்டு ஏற்படாது

(கொழும்பு)

முப்படைகளின் தளபதிகளும், பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்காவும் திறைசேரியின் செயலாளர் ஆர்- பாஸ்கரலிங்கத்துடன் நவம்பர் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கான ஒதுக்கீடு குறித்து ஆலோசனை கலந்ததாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

1993 வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் வெட்டெதுவும இடம் பெறாது என்று அதே வட்டாரங்கள் கூறுகின்றன-

## வீரச்சாவு



வீரவேங்கை
இயல்வாணன்

25-09-92 அன்று பூநகரி பள்ளிக்குடா பகுதியில் இடம் பெற்ற 62 காவலரண் தகர்ப்பு தாக்குதலில் வீரவேங்கை இயல்வாணன் (முருகேசு வரதராஜன், தென்னயங்குளம் துணுக்காய்) வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொ கின்றனர்.

சிறிலங்கா இராணுவத்தினர் முகாம்களிலிருந்து முன்னேறி வந்தனர் இவர்களை இடைக்காடு என்னும் இடத்தில் வைத்து புலிகள் வழிமறித்து தாக்குதலைநடாத்தினர். பிற்பகல் 3-30மணிகு ஆரம்பித்த இத் தாக்குகல் மாலை 5- 45 மணிவரை நீடித்தது.

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் மட்டக்களப்பு கித்தல்என்ற இடத்திற்கு விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று திரும்பிக் கொண்டிருந்த போது வண்ணாத்தி ஆறு என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கினர்

இத்தாக்குதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இச்சம்பவம் கடந்த வியாழனன்று மாலை 7.00 மணியளவில் இடம்பெற்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

...கும் குழந்தைகளுக்கும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் போஷாக்கு உணவு வழங்கி வருகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி இறங்குதுறை நோக்கி அகோர ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம் குடாக்கடல் பகுதியிலிருந்து கிளாலிப்பகுதி இறங்குதுறையை நோக்கி கடற்படையினர் நேற்று முன்தினம் மாலையில் பீரங்கிப் படகுகளிலிருந்து அகோர பீரங்கித் தாக்குதலையும் 50 கலிபர் தாக்குதலையும் மேற் கொண்டனர்.

இத் தாக்குதல்களால் கரையில் நின்ற ஆறு பிளாஸ்டிக் படகுகள் சேதமடைந்த போதிலும், பிரயாணிகள் எவரும் காயமடையவில்லை எனத் தெரியவருகிறது. (பா)

# புலிகளைப் பலவீனப்படுத்த உடன் 10,000 படை மேலதிகமாக தேவை

## சிசில் வைத்தியரட்னா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டுமாயின் மேலதிகமாக பத்தாயிரம் துருப்புக்கள் தேவைப் படுகின்றனர். இதற்கென மாதாந்தம் மூவாயிரம் பேர் வீதம் புதிதாகஇளைஞர்களை திரட்டி வருகிறோம். இவர்களுக்கு தேவைக்கேற்ற விதத்தில் இராணுவப் பயிற்சியை அளித்து யுத்த பூமிக்கு அனுப்ப சிறிலங்கா இராணுவ தலைமைக்காரியாலயம் முடிவு செய்துள்ளது. இவ்வாறு சிறிலங்கா இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்னா 'சிலுமின' என்ற சிங்கள வார இதழுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்

தற்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக வடக்கில்நடைபெறும் யுத்தத்தில் இராணுவத்தினர் பல போர்முறைத் திட்டங்களை வகுத்தே போரிடுகின்றனர்.

இவர்களுக்கு உதவியாக கடற்படையினரும் விமானப் படையினரும் போர்க்களத்தில் உதவுகின்றனர்-

கடற்படையினர் கடல் மார்க்கமாக விடுதலைப் புலிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்சில் நரசிம்மராவ்

பிரான்சில் மூன்று நாட்களுக்கான உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 50 சதவீத சம்பள உயர்வு அரச ஊழியர் கோரிக்கை

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்யும் முகமாக சம்பள அதிகரிப்பொன்றை வழங்கும்படி அரச ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத தெரிய வருகின்றது.

குறைந்த பட்சம் முப்பது வீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது. அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவது பற்றி முடிவெடுக்க அரசினால் நியமிக்கப்பட்ட குழுவிடம் ஊழியர்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதே சமயம் குறைந்த பட்சம் ஐம்பது வீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமெனவும் மேற்படி குழுவிடம் ஊழியர்களின் வேறொரு தரப்பினரால் எடுத்துக் கூறப் பட்டுள்ளது

மேற்படி குழுவினரின் அறிக்கை இம்மாத முடிவிற்குள் அரசிடம் சமர்ப்பிக்கப் படும் என தெரிய வருகிறது.

அதே சமயம் இவ் வருட முடிவிற்குள் ஏறத்தாழ 4 லட்சம் பேர் வரையிலான அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருவதாயும் தெரிய வருகின்றது என அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

## மூன்றாவது நாளாக விமான நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் நடமாட்டம் நேற்றும் மூன்றாவது நாளாக அதிகரித்து காணப்பட்டது

நேற்று நாள் முழுவதும் அவ்ரோ விமானங்கள் தென் பகுதியில் இருந்து பலாலி விமானத்தளம் நோக்கி அடிக்கடி வந்து இறங்கிச் சென்றபடி இருந்தன. இதற்கிடையில உலங்குவானூர்தி ஒன்று வலிகாமம் மற்றும் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றது.

பொருளாதார தடையினால் ஏற்பட்டுள்ள

# வடபகுதி நெருக்கடிநிலை குறித்து ஐ. நா. செயலகத்திற்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கை மற்றும் பொருளாதாரத்தடை காரணமாக வடபகுதியில் உருவாகியுள்ள நெருக்கடி நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபை ஜெனிவா அலுவலகத்திற்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது

வடபகுதியில் இயங்கும் உலக அகதிகள் பராமரிப்பு நிறுவனமொன்று இதனை அறிவித்துள்ளது

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக மேற்படி பகுதிகளில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் தொடர்ந்து அமுலாகும் பொருளாதாரத் தடை என்பவற்றால் இப்பகுதிகளில் பெரும் நெருக்கடியான நிலை உருவாகியுள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக பலர் உயிரிழந்து வருகின்றனர் மேலும் பலர் அங்கவீனர்களாக மாறுகின்றனர். இவற்றைவிட பல ஆயிரக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நீரை சேமித்து
ஊரை செழிக்கவைப்போம்

## வரி விளம்பரம்

**Your Watches, Clocks & Radios**

Your Watches Clocks & Radios to repair? Contact us mmediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி5044)

### உடன் விற்பனைக்கு உண்டு

வெள்ளை சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/- உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு:- இல. 01. மத்திய சந்தை மானிப்பாய். (3272)

### யாழோசையின் இசைவகுப்புகள்

புல்லாங்குழல், வயலின், ஓகன், கிற்றார் ஆகிய பாடங்கள் 05-10-1992 விஜய தசமி அன்று (திங்கள்) மாலை 4. 30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தொடர்பு:- ''யாழோசை'' 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (3282)

### விற்பனைக்கு

நல்லின சீமை வளர்ப்பு (வெள்ளை, கறுப்பு) முயல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்கைலாக் ஏஜென்சி, பிரதான வீதி, சுழிபுரம். (சி / 5137)

## பொலிஸிற்கு கத்திக்குத்து

தெஹிவளைப் பகுதியில் பிரபல கேடி ஒருவரை சோதனை செய்யச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கத்தி வெட்டுக் காயங்களுடன் களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கான்ஸ்டபிளான ரணசிங்க, கேடியான டபிள்யூ. டி. தயானந்த என்பவரது வீட்டைக் கண்காணிக்க சிவில் உடையில் சென்றுள்ளார்.

பொலிஸார் கதவைத் தட்டிய போது திடீரெனவெளியே வந்த கேடி கான்ஸ்டபிள் மீது கத்தியால் குத்திவிட்டு தனது மனைவியுடன் தலைமறைவாகியுள்ளார். கான்ஸ்டபிள் ரணசிங்க கத்திக்குத்துக் காயங்களுடன் களுபோவில

## மானிப்பாய் இந்துவில் அதிபர்கள் சந்திப்பு

பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்களுக்கான கூட்டமொன்று நாளை காலை ஒன்பது மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கும் தற்காலிக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் அதிபர்கள் அனைவரும் வகுப்பு ரீதியாகவும், பிரிவு ரீதியாகவும், பால் ரீதியாகவும், மாணவர்களின் எண்ணிக்கையை வகைப்படுத்திஎடுத்து வரவேண்டும் என்றும் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் மற்றும் நிரந்தர ஆசிரியர்கள் ஆகியோரின் பிறந்த திகதி உட்பட தராதரங்களையும் எடுத்து வரவேண்டுமென்றும் கோட்டத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பகேசவேலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### விமான விபத்தில் 163 ராணுவம் பலி

(லேகாஸ்)

நைஜீரியாவில் லேகாசுக்கு அருகே நடைபெற்ற விமான விபத்து ஒன்றில் நூற்றி அறுபத்து மூன்று இராணுவ அதிகாரிகள் இறந்து போனதாக தெரியவருகிறது. கடந்த சனியன்று இரவு இவ் விமான விபத்து ஏற்பட்டது.

### பெற்றுக்கொள்ளவும்

குருநகர் குருசோல்ட் வீதியைச் சேர்ந்த சண்முகவேல் விக்கினேஸ்வரன் (710650780 V) என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்
கரவெட்டி

## பதவி வெற்றிடம்
## லொறிச்சாரதிகள் 312/11

மேற்படி பதவிகளுக்குக் கீழ்க்காணும் தகுதிகளை உடைய சங்கப் பணியாளர்களிடம் தகுதிவாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எமது சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

லொறிச் சாரதிகள்; 312/11

01. வயதெல்லை; 18-40
02. தகைமைகள் :

5 ஆம் தரத்திற்கு மேல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கனரக வாகனம் செலுத்தும் அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல். அத்துடன் அண்மையில் லொறிச்சாரதியில் 10 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

03. பிணை ரூபா 5,000/-
04. சம்பளம் ரூபா 805/- - 1260/- 
25×7 - 35×8
05. விண்ணப்பத்துடன் உள்ளடக்கப்பட வேண்டியவை: பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம், நற்சான்றுப் பத்திரங்கள், வதிவுத் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள்.

விண்ணப்பங்கள் காரியாலயத்தில் பெற்றுப் பூர்த்தியாக்கி 20-10-1992 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ''பொது முகாமையாளர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ கூ. சங்கம், கரவெட்டி'' என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். நீங்கள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

– பொதுமுகாமையாளர்

## கேள்வி அறிவித்தல்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணக்கிளை கூரை வேலைகளுக்கான

### திருத்தம் செய்தல்

மேற்படி வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1. இவ்வேலை சம்பந்தமான முழு விபரங்களும் இச் செயலகத்தின் பரிபாலனக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
2. அரசாங்கத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கலாம்.
3. கேள்விப்படிவங்கள் மீளளிக்கப்படும் கட்டுப்பணமாக ரூபா 250 - செலுத்தி யாழ் அரசாங்க அதிபரிடமிருந்து 1992 - 10 - 05ஆம் திகதி தொடக்கம் 1992-10-19ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் காலை 10 00 மணிதொடக்கம் பி. ப 3. 00 மணி வரைபெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் யாழ் அரசாங்க அதிபர், மாவட்ட ஆணையர் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு 1992-10-23 ஆம் திகதி முற்பகல் 11. 00 மணிக்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அல்லது அதற்கென இச் செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இட வேண்டும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர்பத்திரம் அடங்கிய தபால் உறையின் இடது பக்கத்தில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பம். கா. மாணிக்கவாசகர்,
அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்
28 - 09 - 1992.
(சி - 5139)

## G. A. Q 1993 - 94

**பேராதனை** பல்கலைக்கழகம்

★ இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ A / L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

❋ விரிவுரைகள் ஆரம்பம் :

**3 - 10 - 92 8.00 மணி**

விபரங்கள் நேர அட்டவணை என்பவற்றை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி
எஸ். அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-5128)

யாழ் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடத்தும்

## கலைமகள் விழா

இடம்:குமாரசுவாமி மண்டபம்
காலம்: 02-10-92 வெள்ளிக்கிழமை
மாலை 3.00 மணி.

3.00-4.00 - மங்கள இசை
4.00-5.00 - அதிஷ்டலாபச் சீட்டு அறிமுகம்
5.00-7.00 - வழக்காடு மன்றம்
தலைவர் இ. ஜெயராஜ் (கம்பன்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ப.மா ச. யாழ். இ.க.
பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்
(சி-5134)

## குறுகியகால உளவளத் துணைப் பயிற்சி

★ ''சாந்தியகம்'' நடாத்தவிருக்கும் குறுகியகால உளவளத்துணைப் பயிற்சி ஐப்பசித் திங்கள் 4 ஆம் நாள் (04-10-1992) காலை 9 00 மணிக்கு தொடர்பகத்தில் (657/1, மருத்துவமனைச்சாலை, யாழ்ப்பாணம்) ஆரம்பமாகும்.
★ ஏற்கனவே இப்பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்கள் மட்டுமே தொடக்கநிலை விரிவுரைகளுக்கு அனுமதிக்கப்படுவர்.
★ குறிக்கப்பட்ட நாளில் நேர்முக உரையாடலின் பின்னர் பயிற்சிக்கு ஆட்கள் தெரிந்து கொள்ளப்படுவர்.
★ தொடக்கநிலை விரிவுரைகளுக்குச் சமுகந் தராதவர்கள் மேற்கொண்டு பயிற்சியில் பங்குகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

நன்றி - வணக்கம்

''சாந்தியகம்''
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
நிறைவேற்றுப் பணிப்பாளர்
(3291)

யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடத்தும்

## சொற்பொழிவுத் தொடர்

அமரர் அப்பாத்துரை குமாரசுவாமி
(அதிபர் யாழ். இ.க. 1933 - 1952)

பொருள்: ''தமிழ்த் தீவிரவாதத்தின் பண்பாட்டு வேர்கள்'' ஓர் உசாவல்

பேருரை: கார்த்திகேசு சிவத்தம்பி
தமிழ்ப் பேராசிரியர்

இடம்: குமாரசுவாமி மண்டபம்
காலம்: 01-10-1992 வியாழக்கிழமை
மாலை 3.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

யாழ். இ.க
பாலசுப்பிரமணியம் தவபாலன்

காயங்களுடன் கஞபோவில
ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்
பட்டுள்ளார்.

— பொதுமுகாமையாளர்

24-09-1992 (சி-5126)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-5128)

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

யாழ். இ.க
பழைய மாணவர் சங்கம்

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

(சி-5135)


## உங்களுக்குகந்த வகையில்.........

### சிறந்த - தரமான - நம்பகமான

## நாட்டரிசி தரம் - 01
## பச்சை அரிசி

### என்றும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
### பெற்றுக் கொள்ள நாடுங்கள்

# முருகன் அரிசி ஆலை
## இணுவில்

(சி-5136)


## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 30

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 2 - தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு விசுவமடு, கல்மடுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
**சுதா** (சுப்பிரமணியம் திருச்செல்வம் - குமரபுரம், கிளிநொச்சி)

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - தீவகம், ஊர்காவற்றுறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**சரத்பாபு** (சுந்தரலிங்கம் சுந்தரகுமார் - துன்னாலை வடக்கு, கரவெட்டி - யாழ் )

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட 2 - தமிழர்கள்- 40 ஆம் கட்டை, சிறிலங்கா அதிரடிப்படை முகாம் கடலோரம் சடலங்களாகக் கரையொதுங்கிய 4-தமிழர்கள்

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஐயங்கேணி செங்கலடிப் பகுதிகளைச் சேர்ந்த 3- தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - அம்பாறை எல்லைப் பகுதியான 13ஆம் கிராமத்தில் சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட வெறியாட்டத்தின்போது படுகொலை செய்யப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டுக் காணாமலும் போன இளம்பெண்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் தந்தை, அவரது பிள்ளைகள் நால்வர் (ஒரே குடும்பத்தவர்) உட்பட பல தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5133)

### சிந்தனைக்கு

இயற்கையை நேசிக்காத மனிதன் எனக்கு மிகுந்த ஏமாற்றம் அளிப்பவன். அவன் மீது நான் அவநம்பிக்கை கொள்ள இடமுண்டு.

— ஓட்டோ ஃபன் பிஸ்மார்க்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## அமெரிக்காவின் விருப்பம்

"வடக்கு கிழக்குப் பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்பதால் ஐக்கிய நாடுகள் சபையோ, வேறு எந்த சர்வதேச அமைப்போ இதில் தலையீடு செய்யுமென நான் எண்ணவில்லை. எதிர்பார்க்கவுமில்லை" இவ்வாறு சிறிலங்காவின் பிரதம மந்திரி டி.பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஈராக்கை ஒத்த அளவில் இலங்கையிலும் சிறுபான்மை இனங்கள் அரசால் ஒடுக்கப்படுகின்றன என்றும், அதில் ஐ. நா. சபை பாராமுகமாக இருக்கின்றதென சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவர் குற்றம் சாட்டியுள்ளதைத் தொடர்ந்தும், தமிழர் தேசிய இனப்பிரச்சினையை ஐ. நா. விற்குக் கொண்டு போக சில முயற்சிகள் எடுக்கப்படுகின்றது என எழுந்த பத்திரிகைச் செய்திகள் குறித்துமே டி. பி. விஜயதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

ஐ. நா. சபை ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட முடியாது இது அங்கத்துவ நாடுகளின் இறையாண்மையைப் பாதிக்கும் செயல். ஐ. நா. சபை தலையிட்ட விவகாரங்கள் எல்லாம் தீர்த்து வைக்கப்பட்டனவா? இவை யெல்லாம் வேறு விடயங்கள். இதேவேளை கடந்த காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது வரையப்பட்ட ஒப்பந்தத்தின் சரத்தாக இருக்கலாம், ஆனால் தற்பொழுது அவ்வாறான ஒப்பந்த விதிகள் ஒன்றும் ஐ. நா வைக் கட்டுப்படுத்தாது. இவை ஐ. நா. சபை என்பது அமெரிக்காவின் சபையாக மாறியுள்ள இன்றைய நிலையில் அமெரிக்காவின் விருப்பமே ஐ. நா. வின் நடவடிக்கைகளாக இருக்குமே ஒழிய ஐ. நா. உருவாக்கப்பட்டபோது வரையப்பட்ட விதிமுறைகள் அல்ல.

அவ்வாறு ஆரம்பத்தின்போது வரையப்பட்ட [illegible]ங்கள் கடைப்பிடிக்கப்படுமானால். ஈராக் [illegible] தலைவர் சதாம் உசைன் எப்படிப்பட்டவராக இருந்தாலும் கடந்த வருட ஆரம்பத்தில் வளைகுடாவில் மூன்றாம் உலகப் போர் என வர்ணிக்கப்பட்ட போர் ஒன்றை அமெரிக்கா நடத்தியிருக்க முடியாது. ஈராக்கின் வடபகுதிக்கு அமெரிக்கப் படையை அனுப்பி குர்திஷ் மக்களைப் பாதுகாப்பதென்ற ரீதியில் ஈராக்கின் ஒரு பகுதியில் நிலை கொண்டிருக்க முடியாது. மேலும் ஈராக்கின் தென்பகுதியில் ஈராக்கிய விமானங்கள் பறப்பதற்கு தடை விதித்துள்ள வேளையில் தமது விமானங்களை அப்பகுதியின் மீது பறந்து செல்வதற்கு அனுமதி

# நெடுங்கேணி இந்திய ராணுவ மினி முகாம்: புலிகள் தாக்கி நிர்மூலமாக்கிய வரலாறு

**[2]**

(நேற்றைய தொடர்ச்சி)

நெடுங்கேணி பிரதான இந்திய இராணுவ முகாமிற்கு மிக அண்மையில் 300 மீ. தூரத்தில் அமைந்துள்ள பாடசாலையிலேயே இம் மினி முகாம் அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை நடைபெறும் வேளைகளில் இவர்கள் தங்களிற்கு என்று சில கட்டடங்களை ஒதுக்கிவிட்டு மீதியிலேயே பாடசாலை நடாத்த அனுமதித்தனர். பாடசாலையின் சுற்றுப்புறங்கள் அனைத்திலும் இவர்களின் பாரிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மினி முகாமிற்கு ஒருபுறம் குளமும் (வெளி) மறுபுறம் சந்தையும், மற்றோர் பக்கம் முல்லைத்தீவு வவுனியா பிரதான பாதையும், மற்றைய பக்கம் சிறு வெளியும், முகாமிற்கு முன்பாகச் சிலோன் தியேட்டர் செல்லும் பிரதான பாதை பிரிந்து செல்வதுமான நாங்கள் தாக்குவதற்கு மிகவும் கடினமான பிரதேசத்திலேயே இம் மினி முகாம் அமைந்திருந்தது. இதில் 25 முதல் 28 இராணுவ வீரர்கள் உள்ளார்கள். இவர்கள் அனைவரும் சீக்கிய இராணுவ வீரர்களே. இவர்கள் இரவு 7மணியளவில் நெடுங்கேணி பிரதான இராணுவ முகாமிற்கு சென்று விட்டு மறுநாள் அதிகாலை 5 மணியளவில் மீண்டும் மினி முகாமிற்கு வந்து விடுவார்கள். இடையிலே உள்ள 10 மணித்தியாலஇடைவெளிக்குள் நாங்கள் பாடசாலை வகுப்பறை, செயலகம், ஆசிரியைகள் ஓய்வு அறை என்பவற்றில் 5 பேர் 5 பேராக பிரிந்து மறைந்து இருக்கப் போவதாகவும், இராணுவத்தினர் முகாமிற்குள் வந்த பின்னர் வெளியில் நிற்கின்ற நவம் ஒரு போராளியை அனுப்பி மினிமுகாமை நோக்கி துப்பாக்கியால் சுட்டு விட்டு திரும்பும்படி கட்டளை இடுவார். நாங்கள் உள்ளே அதுவரைக்கும் இராணுவத்திற்கு எந்தவித சந்தேகமும் வரவிடாமல் பதுங்கி இருப்போம் என்றும் வெளியில் இருந்து துப்பாக்கிச் சூடு கேட்ட பின்னர் நாங்கள் உள்ளே இருந்து தாக்குதலை ஆரம்பிப்போம் என்று கூறினேன். அனைவரும் அதற்கு சம்மதித்தனர்.

நான் எனது குழுவினர் பதினைந்து பேரையும் 5 பேர் 5 பேராக மூன்று குழுக்களாக பிரித்து அவற்றிற்கு ஒவ்வொன்றிற்கும் குழுத் தலைவரை நியமித்து விட்டு இராணுவ மினி முகாமிற்கு வேவு பார்க்கச் சென்றுவிட்டேன்.

மறுநாள் மாலை (10-ம் நாள்) சகல குழுக்களுடனும் நவம் நெடுங்கேணி பெரிய குளம் பகுதியில் என்னை சந்தித்து இன்று வெள்ளிக்கிழமை நாளை சனிக்கிழமை பாடசாலை நடைபெறாது ஆகவே இன்று இரவு மினி முகாமிற்குள் தங்கிவிட்டு நாளை காலை தாக்குதலை மேற்கொள்ளும்படி எனக்கு கட்டளை இட்டுவிட்டு அவர் தனக்குரியதும் தனது குழுவிற்குரியதும் இடங்களை பார்வையிட சென்றுவிட்டார். நான் மற்றைய குழுக்களை ஓர் இடத்தில் தங்கவைத்து விட்டு நவத்துடன் சென்றுவிட்டேன்.

அன்று இரவு இராணுவத்தினர் சற்று தாமதமாகவே $11\frac{1}{2}$ மணியளவிலேயே மினி முகாமில் இருந்து பிரதான இராணுவ முகாமிற்கு சென்றனர். இதனால் எமது செயற்பாடுகள் எதும் நடைபெறவில்லை 12மணியளவில் நாங்கள் பாடசாலையில் அமைந்துள்ள மினி இராணுவமுகாமிற்குள் எமது கால்தடங்கள் பதியாத முறையில் ஒவ்வொருத்தராக உட்சென்றோம்.

5 மணித்தியாலங்களே மீதமாக உள்ளதால் எமதுவேலைகளை துரிதமாக செய்துமுடித்தோம். எப்படியோ அதிகாலை 4.20 மணியளவில் எமது அனைத்து போராளிகளும் மறைவாக தங்கக்கூடிய இடங்களை தெரிவு செய்தோம். 4.30மணிக்கு எல்லோரும் அவர் அவர்களுக்குரிய இடங்களில் மறைவாக நிறுத்தப்பட்டனர்.

அதிகாலை 5.15 மணியளவில் இந்திய சீக்கிய சிப்பாய்கள் அவர்களது பாடசாலை மினிமுகாமிற்குள் பிரவேசித்தனர் வந்தவர்களில் ஒரு பிரிவினர் பாடசாலை சட்டடங்களை ஒரு முறை நோட்டமிட்டுவிட்டு சென்று தமக்குரிய காவல் அரண்களில் நிலை எடுத்தனர். இவர்களை மறைவிடங்களில் இருந்த நாங்கள் பார்த்தபோது எங்களை உரு மறைந்து ஒளிந்து கொண்ட முறை சரியா என எமது போராளி ஒருவர் பார்வையிட வருகின்றார் என்று எங்கள் மனதிற்குள் நினைத்துமனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டோம். ஒளித்துக்கொண்டோம்

சுற்றிநின்ற இந்திய சிப்பாய்களை நினைக்கும் போது; எங்களிற்கு உள்ளே உள்ள விடுதலைப்புலிகளிற்கு வெளியில் இருந்து எந்தவிதமான இடையூறும் வரவிடாமல் காவல்மிக கடுமையாக உள்ளதாக நினைத்து எங்களிற்கு உள்ளேயே சிரித்துக் கொண்டோம். எங்களிற்கும் இராணுவத்தினருக்கும் சில அடிதூரமே இருந்ததால் எம்மால் வெளிப்படையாக சிரிக்க முடியவில்லை

நாங்கள் 5 பேர் இருந்தது அதிபர் அறை. அதன் ஓர்பக்க யன்னலோரமாக ஓர் இராணுவ வீரன் காவலில் நிற்கின்றான் அவனது பின்பக்க தலை எமக்கு சில அடி தூரத்திலேயே தெரிந்தது. இவன் எமது அறையின் உடைந்த யன்னலின் மேல் சாய்ந்து இருந்ததால் இவனது தலைப் பாகையின் ஒருபகுதி குஞ்சம் எமது அறைக்கு உள்ளே தொங்கியது. இவன் சற்றும் எதிர்பாராததாலே உள்ளே நாங்கள் இருப்பதை அவதானிக்க முடியவில்லை. என்றாலும் என்னுடன் இருந்த எல்விற்ரன்னிடம் இவன் திரும்பினால் சுடும்படியும் எந்த நேரமும் துப்பாக்கி இவனை குறிபார்க்கட்டும் என்றும் சைகைமூலம் கட்டளை இட்டேன். கணேசையும் உதவிக்கு சுடும்படி கட்டளை இட்டேன் சைகை மூலம்.

நான் அவ் அறைக் கதவின் வாசலை உட்புறமாக பூட்டி அதன் மேல் சாய்ந்து இருந்தேன்.. கதவின் மறுபுறம் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் கதிரைகளை போட்டு துப்பாக்கிகளை எமது கதவின் ஓரத்தில் சாத்தி விட்டு பீடி குடித்தபடி சம்பாசித்துக் கொண்டு இருந்தனர். அவர்களது பீடியின் புகை கதவு இடுக்குகளிற்குள்ளால் அறைக்குள்ளே வந்து எங்களுக்கு பெரும் சிரமத்தை கொடுத்தது பீடிப் புகையினால் இருமி விடுவோமோ என்ற பயம். இவர்கள் இருவரும் இடை இடையே உரத்த குரலில் ஹிந்தி சினிமாப் பாடல்களை பாடியபடி இருந்தனர். இடை இடையே றோட்டில் சென்ற பெண்களை கூப்பிட்டு பலவிதமான கேள்விகளும் ஹிந்தியில் கேட்டார்கள். இரண்டு மூன்று பெண்கள் அழுவது மிகவும் நன்றாக எமக்கு கேட்டது ஏன் என்று எமக்கு இன்றுவரை விளங்கவில்லை

எமக்கு அடுத்த அறையில் (50 மீற்றர் தூரத்தில்) தங்கேஸ் தங்கி இருந்தார். அவர் தங்கி இருந்தது ஆசிரியைகள் ஓய்வெடுக்கும் அறை. அதன் யன்னல்கள் யாவும் மரத்தால் ஆனவை அதனால் அவர்களுக்கு வெளியில் நடப்பவற்றை பார்க்கமுடியவில்லை. இவர்கள் 5 பேரின் அறை வாசலில் மினிமுகாம் அதிகாரிகளும், தொலைத்தொடர்பு சாதன அதிகாரியும் ஓர் புளிய மரத்தின் கீழ் மேசைகளின் மேல் இருந்து பெரிதாக எதைப்பற்றியோ அலட்டிக் கொண்டிருந்தனர். இவர்களது மறுபுறம் யன்னலிற்கு பக்கத்திலேயே பாரிய காவல் அரண் ஒன்று இருந்தது. இதுவும் றோட்டின் ஓரம் என்பதால் அதில் இருந்த இந்தியச் சிப்பாய்கள் ரோட்டில் செல்லும் இளம் பெண்களை தமக்கு அருகே கூப்பிட்டு நிற்கவிட்டு தங்களுக்குள் சிரித்து கதைத்துக் கொண்டிருந்தனர். இவர்களது அறை சற்று பெரிதாக இருந்ததால் இவர்கள் ஆளுக்கு ஒரு மூலையில் ஒய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

அடுத்த அறையில் (சற்று பின்பக்கமாக முகாமின் மத்தியில் உள்ள ஓர் அறை) காந்தனும் 4 பேரும் தங்கி இருந்தனர். இவ் அறைக்குள் உள்ள 5 பேரும் முக்கிய பங்கு உள்ளவர்கள். ஏன்எனில் இவர்கள் முகாமின் மத்தியில் உள்ளதால் இவர்களுக்கு இரண்டு எல் எம். ஜி. பொருத்திய பாரிய காவலரண்களை கண்காணிக்கும் பொறுப்பு உள்ளது. இவர்களது அறையின் முன்னால் உள்ள தேமா மரத்தடியில் 5, 6 இந்திய சிப்பாய்கள் உரையாடியபடி இருந்தார்கள். இந்த அறையின் யன்னலை திறந்தால் முக்கியமான எல். எம். ஜி. பொருத்திய காவல் அரணின் முதுகுப்புறம் மிகக்கிட்டவாக 30 மீ. இல் தெரியும். இந்த யன்னலிற்குள் இருந்து சுட்டால் எல். எம்.ஜி காவல் அரணை இலகுவாக செயலிழக்கச் செய்துவிடலாம் இவர்களின்அறையின்மற்றைய யன்னலினூடு பார்த்தால் தங்கேஸ் தங்கி உள்ள அறையும் அதன் அருகில் உள்ள சில காவல் அரண்களும் தெளிவாகத் தெரியும். ஆகவே இவர்கள் சமயத்தில் தங்கேஸ் இற்கும் உதவி வழங்கலாம் ஆகவே இவ் அறையில் உள்ளவர்களுக்கே முக்கியபங்காகஇருந்தது.

எனக்கும் நவத்திற்கும் வோக்கி தொடர்பு நிறுத்தப்பட்டு 45 நிமிடங்கள் கழிந்து விட்டன. வெளியில் இருந்து எந்த விதமான துப்பாக்கிச் சூடுகளும் கேட்காததனால் எமது மனதில் பல்வேறு யோசனைகள் புகுந்து விட்டன. எல்விற்ரன், ஜெகன், கணேஸ், சுதன் ஆகியோரே என்னுடன் அறையில் இருந்தவர்கள். இவர்கள் யாவரும் இராணுவம் முகாமிற்குள் வந்து $1\frac{1}{2}$ மணி நேரமாகின்றது இப்படியே இருந்தால் தற்செயலாக இராணுவத்தினர் எம்மவர்களை முகாமிற்குள் கண்டுவிட்டால் முடிவு வேறுவிதமாக மாறி விடும் என்று சைகை மூலம் விபரித்தனர். எனக்கும் உண்மை விளங்கி இருந்ததாலும் இன்னும் ஒரு மணித்தியாலம் பொறுமையாக இருந்து பார்ப்போம்.அதன் பின்னரும் வெளியில் இருந்து சூடு வரா விட்டால் நாமே உள் இருந்து தாக்குதலை ஆரம்பிப்போம் என்று அவர்களை சமாதானம் செய்து தடுத்தேன் பின் மினி முகாமிற்கும் நவத்திற்கும் இடையில் ஏதாவது பிரச்சினையோ அதனால் தான் நவத்தினுடைய குழுவினர் மினி முகாமிற்கு வெளியிலிருந்து துப்பாக்கியினால் சுடவில்லை எங்களிற்குள் முடிவெடுத்தோம்.

(தொடரும்)

நெடுங்கேணி பாடசாலை இந்திய இராணுவ மினி முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவத்தை விபரிக்கின்றார் மேஜர் கிண்ணி. இத்தாக்குதலுககுத் தலைமை தாங்கிய மேஜர் கிண்ணி, 10 - 07 - 1992 இல் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்தினார்.

அப்பகுதியின் மீது பறந்து செல்வதற்கு அனுமதி பெற்றிருக்க முடியாது.

இதே போன்று, அமெரிக்காவின் விருப்பின்றி கம்போடியா, யூக்கோஸ் செலவோக்கியா, சோமாலியா என ஐ. நா வின் படைகள் உள்நாட்டுவிவகாரங்களில்நேரடியாகதலையீடு செய்துவருவதும் நடந்திருக்க முடியாது.

இவ்வாறு ஐ. நா. வின் பெயரில் அமெரிக்கா செய்யும் தலையீடுகளுக்கு மனித உரிமை விடயங்கள் தொடர்பு படுத்தப்படுகின்றன. பொருளாதார உதவிகள் நிபந்தனைகள் ஆகின்றன. அண்மைக்காலமாக மனிதஉரிமை மீறல்களுடன் பொருளாதார உதவிகளை இணைப்பதை மூன்றாம் உலகம் கண்டனம் செய்து வருகின்றது. கடந்த மாதம் ஜகர்த்தாவில் நடந்த அணிசேரா மாநாட்டிலும் இது தொடர்பானவிடயம் முக்கியத்துவம்பெற்றது மூன்றாம் உலக நாடுகள் இது குறித்து தமது பலத்த கண்டனத்தையும் தெரிவித்தன. அத்தோடு ஐ நா. வில் 'வீட்டோ' அதிகாரம் நீக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தன

ஆனால் இந்நாடுகளில் பெரும்பாலானவை அமெரிக்காவையும் அதன் கூட்டாளிகளான மேற்கு நாடுகளையும் எதிர்த்து சுயமாக பொருளாதார ரீதியில் தாக்குப்பிடிக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகையினால், "உள்நாட்டு விவகாரங்களில் அப்பட்டமான தலையீடு" எனத் தெரிந்திருந்தும் இந்நாடுகளால் ஏதும் செய்ய முடியாது உள்ளன. அதாவது, கூட்டாகச் சேரும்போது தலையீடுகளுக்கு எதிராக குரல் எழுப்புகின்ற போதும், தனியாக மேற்குலக நாடுகளிடம் பொருளாதார உதவி கோரி மண்டியிடும் நாடுகளாகவே இன்றும் உள்ளன.

இந்நிலையில், இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சினை தொடர்பான போர், ஓர் உள்நாட்டுப்பிரச்சினை என்றும், அதனை 'ஐ நா' பார்த்துக் கொண்டிருக்கும் எனவும் பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்க கருதுவாரேயானால், இன்றைய உலக நடப்பை அவர் எந்தளவு எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளார் என்பதே எமக்குள்ள சந்தேகமாகும். இன்று யார் விரும்பினால் என்ன? யார் விரும்பா விட்டால் என்ன அமெரிக்காவின் விருப்பம் எதுவோ அதுவே ஐ. நா. தீர்மானம் என்பதைபிரதமர் டிங்கிரி பண்டா விஜயதுங்கா விளங்கிக்கொள்வது நல்லது. இது சிறிலங்கா அரசுக்கும் நல்லது.

நான் எனது குழுவினர் பதி

குள்ளேயே சிரித்துக் கொண்

இடுக்குகளிற்குள்ளால் அறைக்

தனர். இவ் அறைக்குள் உள்ள

(தொடரும்)

## நீர்மூழ்கி எதிர்ப்பு ஹெலிகொப்டர்கள்

# தாய்வானுக்கு விற்க அமெரிக்கா முடிவு; சீனா மீண்டும் எச்சரிக்கை

(பீக்கிங்)

பன்னிரண்டு நீர்மூழ்கி எதிர்ப்பு ஹெலிகொப்டர்களைத் தாய்வானுக்கு வழங்கும் அமெரிக்காவின் முடிவை சீனா எதிர்த்திருப்பதுடன் இந்த முடிவை மாற்றாது விட்டால் பாரதூரமான விளைவுகள் ஏர்படும் என்றும் எச்சரித்துள்ளது

இந்நீர்மூழ்கி எதிர்ப்பு ஹெலிகளை விற்பனைவு செய்வது தொடர்பாகச் சீன வெளிநாட்டமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு ஒப்பந்தத்தை அமெரிக்காவின் செயல் மீறுவதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட சீன - அமெரிக்க உடன்பாட்டை மீறித் தாய்வானுக்குத் தொடர்ந்து ஆயுதங்களை அமெரிக்கா விற்று வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை தாய்வானுக்கு 12 எஸ் எச்-2 எப் 'லேபப்ஸ்' ஹெலிகொப்டர்களையும், உதிரி என்ஜின்களையும், பதினாறு கோடியே பத்து இலட்சம் டொலருக்கு விற்பனை செய்ய உத்தேசித்திருப்பதாக இவ்வாரம் வெள்ளைமாளிகை காங்கிரசுக்கு அறிவித்துள்ளது

இது தொடர்பான அமெரிக்காவின் செயல் முற்றாக ஏற்கத்தக்கதல்ல. சீனவின் உள்விவகாரத்தில் தலையீடு செய்வதாக அமைவதால் இத்தவறான முடிவை அமெரிக்க அரசாங்கம் இரத்துச் செய்யவேண்டும். இன்றேல் இதற்கான பாரதூரமான விளைவுகளுக்கு அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டுமென சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தாய்வான் சீனாவின் ஒரு மாகாணம் எனக்கூறி வரும பீக்கிங், சீன-அமெரிக்கஉடன்படிக்கை தாய்வானுக்கு ஆயுத விற்பனையை கட்டுப்படுத்தும் அம்சங்களைக் கொண்டுள்ளது என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தவிர ஏற்கனவே 150 எப- 16 ஜெட் விமானங்களை தாய்வானுக்கு விற்பனை செய்வது சம்பந்தமாக சீன-அமெரிக்க உறவில் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நிலையில் இப்புதிய ஹெலிகொப்டர்களை விற்பனை செய்ய எடுத்த முடிவு மேலும் சிக்கலை ஏற்படுததியுள்ளது.

### பாதுகாப்புசெலவினம் அதிகரிப்பு

பாகிஸ்தானின் பாதுகாப்பு செலவினம் அளவுக்கு அதிகமானதாக இருப்பதாக உலக வங்கி கூறியுள்ளது. அந்நாட்டின் பொருளாதார வாய்ப்புகள்அதிகரிக்கப்படாத இடத்து அங்கு வேலையின்மையும், நெருக்கடிகளும் எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் அதிகரிக்கும் என்றும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

# ஜார்க்கன்ட்போராட்டத்திற்கு பீகார் அமைச்சர் ஆதரவு

(பாட்னா)

சோட்டா நாக்பூர், சர்தால் பர்கூர், பிராந்தியத்தின் பதினாறு மாவட்டங்கள் அடங்கிய தனியான ஜார்க்கன்ட் மாநிலம் ஒன்றை உருவாக்கும் கோரிக்கைக்கு மற்றுமொரு பீகார் மாநில அமைச்சர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

பீகார் பழங்குடி மக்களின் நல்வாழ்வுத் துறை அமைச்சரான கரம் சந்த் பகத் இது பற்றி மத்திய அரசுக்கு வலியுறுத்தியுள்ளார். காம் சந்த் பகத் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் ஜார்க்கன்ட் பிரச்சினை குறித்து ஒருதரப்பு கருத்து எதையும் மேற்கொள்ள வேண்டாம் என்று ஜார்க்கன்ட் ஆதரவு ஜனதா தளத் தலைவர்களும் மாநில ஜனதா தளத் தலைமையிடம் கேட்டுக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

# ஆந்திர முதல்வர் ரெட்டி நேற்று பதவி துறந்தார்

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேச முதல்வரான இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜனார்த்தன் ரெட்டி நேற்றுத் தமது பதவியை ராஜினாமாச் செய்வதாக அறிவித்தார்.

நேற்று மதிய வேளையில் ஆந்திரப் பிரதேச ஆளுநர் டாக்டர் கிருஷ்ணகாந்தைக் ஹைதராபாத்திலிருக்கும் ராஜ்பவன் இல்லத்தில் சந்தித்து தமது முடிவை ஜனார்த்தன் ரெட்டி அறிவித்தார்.

திரு. ரெட்டியின் பதவி துறப்பை ஏற்றுக் கொண்ட ஆளுநர் மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரையில் அலுவலகப் பணியை தொடரும்படி கேட்டுக் கொண்டார்.

இருபது மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் திறக்கப்படுவது தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றை அடுத்து ஆந்திராவில் அரசியல் நெருக்கடி உருவாகியிருந்தது தெரிந்ததே.

## அபுமூசா தீவுபற்றிய

# ஈரான் - அரபு எமிரேட் பேச்சுக்கள் முறிந்தன

(தெகிரான்)

அபுமூசா தீவுகள் பற்றிய ஈரானுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்டிற்கும் இடையே ஆரம்பித்த பேச்சு வார்த்தைகள் ஒரு நாளைக்குள்ளாகவே முறிந்து போயின.

சர்ச்சைக்குட்பட்ட வேறு இரு தீவுகள் பற்றிய பேச்சுக்கு ஈரான் தொடர்ந்து மறுத்து வருவதாலேயே இந்த பேச்சுக்கள் முறிவடைந்துள்ளன. ஈரான் 1971 ஆம் ஆண்டில் இந்த இரு தீவுகளையும் ஆக்கிரமிப்பு செய்ததாகவும், அவற்றை திருப்பித் தர வேண்டுமெனவும் ஐக்கிய அரபு எமிரேட் கூறி வருகின்றது

# சர்வதேச விமான நிலையம் நவீன மயப்படுத்தப்படும்

## - இந்தியா அறிவிப்பு

(டில்லி)

சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய முக்கிய நகரங்களில் உள்ள நான்கு சர்வதேச விமானங்களையும் பெருமளவில் நவீனப்படுத்தும் திட்டமொன்றை இந்திய தேசிய விமான நிலைய அதிகார அமைப்பு தயாரித்திருக்கிறது.

திட்டத்தின் முதற்கட்டமாக பம்பாய் மற்றும் டில்லி விமான நிலையங்கள் 400 கோடி ரூபாய் செலவில் நவீனமயப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

## தபால் திணைக்களத்திற்கு 21 எழுதுவினைஞர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால் திணைக்களத்திற்கு இருபத்தியொரு எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட உள்ளனர்-

போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் இவ்வாறு நியமிக்கப்பட உள்ளனர்- நேற்று முன்தினம் இவர்களது ஆவணங்களை சரிபார்க்கும் வேலைகள் நடைபெற்றன- இவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார்கள் என்று தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க) (பா)

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன் ஏற்பாடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொழிற்படுடரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்கட்கும் கூட்டுறவுப் பயிற்சியில் சித்தி அடைந்தவர்கட்கும் முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கிடையில் பொது முகாமையாளர் கரைச்சி தெ. ப. நோ.கூ. சங்கம், கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் இது தொடர்பான மேலதிகவிபரங்களை தலைமைக் காரியாலயத்தில் பெறலாம் எனவும் அறிவிக்கப்படுகிறது. (16)

## உடலையும், உள்ளத்தையும் பண்படுத்தும் விளையாட்டு போட்டிகள்

### -இளங்குமரன்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுகள் உடலுக்கு வலுவேற்றவும் உள்ளத்தைப் பண்படுத்தவும் பயன்படுகின்றன. எனவே தான் உடலையும் உள்ளத்தையும் பண்படுத்தும் முகமாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு விடுதலைப்புலிகள் கல்விக் குழுப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஐந்து பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. இளங்குமரன் மேலும் கூறுகையில்,

கல்வியில் விளையாட்டும் முக்கிய இடம் பெறுகிறது. விளையாட்டு மாணவர்களிடையே போட்டி உணர்வை வளர்ப்பதால் முன்னேற்றத்தை தூண்டுகின்றது என்றும், விளையாட்டுப் போட்டிகளின் போது குழு முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வமும், துடிப்பும் ஏற்படுவதோடு நடுவர்களின் தீர்ப்புக்கு கட்டுப்படும் பாங்கும் வளர்ச்சியடைகிறது என்றும் தெரிவித்தார்.

அத்துடன், உலகளாவிய ரீதியில் விளையாட்டின் தரம் உயர்ந்து வருகின்றது. பழைய சாதனைகள் முறியடிக்கப்பட்டு புதிய சாதனைகள் நிலைநாட்டப்படுகின்றது. ஆனால் அந்த நிலைமையுடன் தமிழீழத்தின் விளையாட்டுத் தரத்தை ஒப்பிட முடியாமைக்கு சிறிலங்காவின் நடவடிக்கைகளே காரணமாகும். பொருளாதார ரீதியான தடையை சிறிலங்கா அரசாங்கம் தமிழீழத்தின் மீது பிரயோகித்து வருவது மட்டுமன்றி விளையாட்டு உபகரணங்களுக்கும் கூட அரசாங்கம் தடை விதிக்கின்றது கல்வியில் சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையின் காரணமாக மாணவர்கள் தமது நேரத்தின் பெரும் பகுதியை ரியூட்டறிகளிலேயே செலவிட நேரிடுகிறது இத்தகைய காரணங்களால் விளையாட்டின் தரம் குறைவடைவதுடன், விளையாட்டுகளில் பங்கு பெறும் வாய்ப்பும் அற்றுப் போகிறது எனவே இந்த நிலையை மாற்ற கல்வி நிலையங்கள், கழகங்கள் மற்றும் நிலையங்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் இக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, உட்பட பலரும் உரைநிகழ்த்தினர். (பா)

### போரிட்ட

இத்தாக்குதலின்போது கோட்டைக்குள் இருந்த அனைத்து அதிகாரிகள் தரத்தினருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ள போதும் இந்த 95 கான்ஸ்டபிள்களுக்கு மட்டும் வழங்கப்படவில்லை.

### அடுத்த

எதுவும் எடுக்கப்படவில்லை எனவும், அங்கு உண்மையான அமைதியும தேர்தலுக்கான சரியான சூழ்நிலையும் ஏற்பட்ட பின்னரே தேர்தல் நடாத்துவது பற்றி தீர்மானிக்கப்படுமென அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

தேர்தலுக்கு ஐக்கிய தேசிய கட்சி தயாராகி வருவதாக கட்சிப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இம்முறை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும தேர்தலில் போட்டியிடுமென கட்சியின் முக்கிய உறுப்பினரான றிச்சார்ட் பத்திரான தெரிவித்தார்.

### புலிகளை

ளுக்கு யுத்தத்திற்குக் கிடைக்கும் ஒத்துழைப்புகளை முறியடிக்க கடற்படையினர் பல புதிய வியூகங்களை கடற்பிராந்தியத்தில் வகுத்து செயற்படுவதாக கடற்படைத் தளபதி அக்மலால் கிறிஸ்டி பர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

விமானப்படையினரும் தமது பூரண ஒத்துழைப்பை போரிடும் இராணுவத்தினருக்கு வழங்கி வருவதாகவும் தெரிவித்த அவ் அதிகாரி யாழ்-குடாநாட்டைக் கைப்பற்றி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதே மறைந்த லெப்டினன்ட ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட பத்து அதிகாரிகளினதும் நோக்கமாக இருந்தது. இதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கும் போதே இவாகள் கொல்லப்பட்டனர்.

இறந்த மேற்படி பத்து சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகளினதும் நோக்கத்தை நிறைவு செய்வதே நாம் அவர்களுக்கு செய்யும் அஞ்சலியாகும் என மேலும் தெரிவித்துள்ளார்.

### தமிழீழ

பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் தமிழீழம் மிகவும் பின்

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்கிளை, தலைமையகம்

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுத்தல்

கீழ்வரும் பிரிவுகளில் மேற்படி, அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுத்தல் இன்று30.09.92 பிற்பகல்4. 00மணிக்கு அவ்வப் பிரிவுகளின் காரியாலயத்தில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம். அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கள் வாங்கியவர்கள் குலுக்கல் நடைபெறும் போது அவ்வப் பிரிவுக் காரியாலயத்தில் சமுகமளிக்க வேண்டுகிறோம்.

அ.) யாழ்ப்பாணம் ஆ.) ஊர்காவற்றுறை
இ.) கரவெட்டி ஈ.) பருத்தித்துறை
உ.) உடுவில்

ஏனைய பிரிவுகளின் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக் குலுக்கல் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
29. 09. 92.

-கௌரவ செயலாளர்

(சி 5142)

---

## 3-ம் மாத நினைவஞ்சலி

---

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே

## கோட்ட மட்டத்திலான இன்றைய உதைபந்தாட்டம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்டத்திலான இன்றையஉதைபந்தாட்டப்போட்டிகளின் விபரம் வருமாறு:

மருதனாமடம்கல்விககோட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு 17 வயது பி பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இணுவில் சைவ மகாஜனக் கல்லூரி

யாழ்ப்பாணக் கல்விக்கோட்டத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.15 மணிக்கு 17 வயது பிரிவில் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், பிற்பகல் 4.30 மணிக்கு 19 வயது பிரிவில் யாழ். மத்தியகல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி.

அமெரிக்க மிஷன் எதிர் ஹாட்லிக் கல்லூரி, பிற்பகல் 4 15 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் விககினேஸ்வராக் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் தேவரையாளி இந்துக்கல்லூரி எதிர் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், பிற்பகல் 4.15 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் வல்வெட்டித்துறை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயம் எதிர் அருணோதய கல்லூரி, பிற்பகல் 4 மணிக்கு விக்ரோறியா கல்லூரி எதிர் மகாஜனக் கல்

---

## கொக்குத்தொடுவாயில் வீரகாவியம் படைத்தோர்



கப்டன்திருமலையான்



லெப். தேவநேய[illegible]



லெப். கோமகன்



2-ம்லெப். இளயபி[illegible]



2-ம்லெப். வெற்றிவேல்

மணலாறு மா[illegible]ட்டம் கொக்குத்தொடுவாயில் நேற்று முன்தினம் அ[illegible] காலை சிறிலங்கா இராணுவ காவல[illegible]ரண்கள் மீது விடுதலைப் புலிகள் த[illegible]குதலை மேற்[illegible]ண்டனர். இத்த[illegible]குதலில் பத்து [illegible]லரண்கள் மு[illegible] தகர்க்கப்பட்டன[illegible] இத்தாக்குதலில்[illegible]ச்சாவடைந்த [illegible] போராளிகள்.

### தெரிவுக்


வாறு வேண்டுகோள் விடுத்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் வைத்த தீர்வுத்திட்டம் குறித்தும் பிரஸ்தாபித்த ஸ்ரீ காந்தா

### அகதிகளுக்கு

மேற்படிநிறுவன கட[illegible] கிளையே கடந்தகால[illegible] லங்கா இராணுவ [illegible] கையால் இடம் பெ[illegible] சண்டிலிப்பாய் உதவி

# 3-ம் மாத நினைவஞ்சலி



## லெப்டினன்ட் மணிமாறன் [சர்மா]

[வைத்தியநாத சர்மா ரமணானந்தசர்மா]

(யாழ். இந்து உயர்தர மாணவன் - 1992)

வீரஜனனம்
12. 04. 1972

வீரச்சாவு
30. 06. 19௮2

மணித்தமிழன் மணிமாறன் மாவிட்டபுரம் ஈழப்
பணிக்கீந்த பாய்புலியன் பகைபலங்கள் பொடியாக்கி
தெல்லி கட்டைக்காட்டினிலே தெய்வீகம் எய்தியவன்
சொல்லிலடங் காதபுகழ் சூழ் ரமணானந்த சர்மா
கனவு நனவாகவென கன்னித்தமிழ் ஈழமெனும்!
தனியரசு அமையவென சளைக்காமல் உழைத்திடுவோம்
ஐயாயிரம் பூக்கள் அருச்சனையின் பின்னேனும்
மெய்யாகத் தமிழீழம் விடியாமல் விட்டிடுமோ?

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

- குடும்பத்தினர்.
நண்பர்கள்.

(3289)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், பிற்பகல் 4.30 மணிக்கு 19 வயது பிரிவில் யாழ். மத்தியகல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி.

வடமராட்சிக் கல்விக்கோட்டத்தில் 'நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு 19 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி

கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயம் எதிர் அருணோதய கல்லூரி, பிற்பகல் 4 மணிக்கு விக்ரோறியா கல்லூரி எதிர் மகாஜனக் கல்லூரி, பிற்பகல் 5 மணிக்கு வட்டு. இந்துக்கல்லூரி எதிர் என்றியரசர் கல்லூரி.

நிறைவு செய்வதே நாம் அவர்களுக்கு செய்யும் அஞ்சலியாகும் என மேலும் தெரிவித்துள்ளார்.

### ராணுவம்

இததாக்குதலில் வீரவேங்கை சித்திரா (சுந்தரலிங்கம் கமலசூரியன் சோனகத் தெரு மட்டுநகர்), வீரவேங்கை நவபாலன் (சிவராசா சுதாகரன் முரக்கட்டாஞ்சேனை மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத தெரிவித்துக் கொள்கின்றனர்.

### ஆவணங்களை

களை மீளப் பெறுவதற்காக விண்ணப்பித்தோர் யாழ். செயலகத்திற்கு நேரில் வநது தமது விண்ணப்பங்களை பூர்ததி செய்து தரும்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கேட்டுக் கொண்டுள்ளார்

### கிராமத்தை

பின்வாங்கிச் சென்ற இராணுவத்தினர் வாகவூரி இராணுவ மிகாமிலிருந்து எறிகணைத தாக்குதலை மேற்கொண்டனர் இத்தாக்குதல்கள் நடந்துகொண்டிருந்த போது உலங்கு வானூர்தியொன்று கலிபர் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதல்களின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை இந்துஜன் (றோமியோ - தவராசா உதயகுமார் 7 ஆம் வட்டாரம், சிறியபுல்லுமலை, மட்டக்களப்பு) வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## லெப். நிமலன் உருவப்படம் திரை நீக்கம்

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகள் லெப்டினன்ட் நிமலனின் (பாலசிங்கம் ஜெயவதனன்) திருவுருவப்படமொன்று பருத்தித்துறை தும்பளை வீதியில் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டுளளது இத் திருவுருவப் படத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பருத்தித்துறை வட்டவைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் திரை நீக்கம் செய்துவைத்தார். லெப்டினன்ட் நிமலனின் தாயார் திருவுருவப்படத்திற்கு மலர் மாலைகள் அணிவித்தார். பெருந்தொகையான பொது மக்கள் இத் திருவுருவப்படத் திரைநீக்க விழாவிலே கலந்து கொண்டனர். (25)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புரட்டாதி மாதத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களானவீரவேங்கைகள் சஞ்சீவி, ரஞ்சித்குமார், கார்த்திகா, ஜீவா, சாம்சன் ஆகியோரை நினைவு கூர்ந்து நடாத்தப்படும் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று புதன்கிழமை இரவு 8 00 மணியளவில் நாவற்குழி 'லவனிதா' குடியிருப்பில் நடைபெறும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களின் நினைவுரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இக் கூட்டத்தில் இடம் பெறும். (22)

### தமிழீழ

பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் தமிழீழம் மிகவும் பின் தங்கியுள்ளது

புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தி அவற்றுக்கேற்ப தொழில் முன்னிலைப் பாடங்களைப் பயிற்றுவிப்பதன் மூலமே எதிர்காலத்திலாவது தமிழீழம் கடல் வளத்தினை முழுமையாக நுகரமுடியும்.

சிங்களப பகுதிகளில் இத்துறை தொடர்பான வழ்க்கைத்திறன், தொழில் முன்னிலைப பாடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதனால் அப்பகுதியில் கடற்தொழில் மேம்பாடடைந்திருப்பதுடன் கடல் வளப்பயன்பாடும் கூடியுள்ளது இவற்றைக் கருத்திற் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

### வடபகுதி

கணக்கான குடும்பங்கள் தமது குடும்பத்தில் உள்ள உழைக்கும் அங்கத்தவர்களை இழந்துள்ளன இதனால் இக் குடும்பங்கள் தமது வருமானத்தையும் குடும்ப உறுப்பினர்களையும் சமகாலத்தில் இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

மேலும் பொருளாதாரத் தடை, மின்சாரத்தடை காரணமாக பல்லாயிரக் கணக்கானவர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர் இதனாலும் பொருள்களின் விலைவாசி உயர்வினாலும் இப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்,

அத்துடன் இராணுவ நடவடிக்கைக் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ளனர்.

இவ்வாறான நிலைமைகள் குறித்த விபரங்கள் மேற்படி அலுவலக அதிகாரிகளது பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. (க)

### தெரிவுக்

வாறு வேண்டுகோள் விடுத்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் வைத்த தீர்வுக்திட்டம் குறித்தும் பிரஸ்தாபித்த ஸ்ரீ காந்தா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள ஆலோசனை பெயரளவில் வடக்கு - கிழக்கை இணைத்து நடைமுறையில் அதனை மூன்று பிரிவுகளாக்க வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்

### புலிகளின்

குதலை நடத்துவதும், கிழக்கில் நடவடிக்கைக்கு தயாராகும் போது யாழ். குடாநாட்டினுள்ளும், வன்னியிலும் தாக்குதல் நடத்துவதும் இராணுவ வட்டாரங்களில் எப்பகுதியில் அதிக கவனம் செலுத்துவதென்ற கேள்வியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கிழக்கில் இராணுவம் மேற்கொள்ளும் ரோந்துப் பணிகளின் போது புலிகளால் வழிமடக்கித் தாக்கப்படுவதும், வடக்கில் இராணுவம் உருவாக்கியுள்ள இராணுவ வேலிகள் அதிரடித் தாக்குதல்களினால் அழிக்கப்படுவதும் இராணுவத்தினரின் அடிப்படை இராணுவ தந்திரோபாயங்களையே சீரழிப்பனவை

போராளிகள்.

### அகதிகளுக்கு

மேற்படிநிறுவன கட்... கிளையே கடந்தகால... லங்கா இராணுவ ந... கையால் இடம் பெ... சண்டிலிப்பாய் உதவி அதிபர் பிரிவுகளிலுள்ள... களில் தங்கியுள்ள வர்க... மிகவும் வறிய குடும்பத்... ருக்கே பால்மா மற்... போஷாக்கு உணவுவகைக... வழங்கிவருவதுடன் மல... கூடங்களை அமைப்பதற்... தேவையானபொருள்களை... வழங்கி வருகின்றனர். [4...

### பிரான்சில்

பி. வி. நரசிம்மராவ் ... முன்தினம் காலை புது... யிருந்து புறப்பட்டுச் ... றார் இவ்விஜயத்தின் ... பிரான்சின் அதிபர் ம... ரோங், பிரதமர் ம... தலைவர்களுடன் பே... களை அவர் நடத்தவு...

யாகவுள்ளன. இத்தந்... பாயத் தோல்விகளால் ... ளவில் குழப்பமடைந்து ... இராணுவம், புதிய ... யுததிகளை எவ்வாறு வ... பது என்பது குறித்துத் ... ரமாகச் சிந்தித்து வருவத... செய்திகள் தெரிவிக்கின்ற...

## உள் வந்த வெளிச்சென்... வாகன இலக்கங்கள்

### 29-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5924

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்...

26-6075, 24-6699, 26 4429, 26-5873, 26-1349, 42-5603, 26-2272, 26-6029, 24-576, 41-9175, 24-4710, 41-8617, 28 3969, 26-365

வட பகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

28-9259. 24-4350, 28-1730, 24-8212, 28-1677, 28-6624, 26-1741. 24-4707. 28-4550, 28-2511, 26-3425 41-7257 26-687. 28-1085, 41-6784, 28-1110, 28-3029, 26-763, 41-1996.